**23.06.2026 <u>அசல் வழக்கு எண்.42/2016</u> Starting Time : 12.29p.m.**

**<u>வா.சா.1</u> திரு. சக்ரபாணி த/பெ. கோவிந்தன்.**

**<u>சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, 8ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.</u>**

**1**. நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் தடை மனு கொடுத்ததற்கான ஆவணமாக **வா.த.சா.ஆ.13** தாக்கல் செய்துள்ளபட்சத்தில், அது யார் மீது கொடுத்தேன் என்றால் எல்லம்மாள் என்பவர் மீது கொடுத்தேன், அவர் இந்த வழக்கில் 1ம் வாதி ஆவார். மேற்படி எல்லம்மாள் என்பவர் ந.எல்லம்மாள் என சொல்வார்கள் என்றால் இல்லை, நடராஜன் மனைவி எல்லம்மாள் ஆவார். இந்த வழக்கின் 3ம் பிரதிவாதி யார் என்றால் எல்லம்மாள் ஆவார். அவரது கணவர் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி 3ம் பிரதிவாதியும் ந. எல்லம்மாள் என்றால் சரிதான்.

**2**. நான் தாக்கல் செய்துள்ள **வா.த.சா.ஆ.13** ஆவணத்தில் 03.01.2014 அன்று கிராம வருவாய் பதிவேடு கணக்கு பட்டா எண்.100 என குறிப்பிட்டுள்ளதில், மேற்படி பட்டா 03.01.2014ல் கொடுக்கப்பட்டதா என்றால் சரிதான், மேற்படி தேதிக்கு முன்பு பட்டா கேட்டு 05.12.2013ல் மனு தாக்கல் செய்தேன். மேற்படி 05.12.2013ல் பட்டா கேட்டு மனு தாக்கல் செய்ததற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் 2013ல் தான் பட்டா கேட்டு விண்ணப்பித்தேன் என்றால் சரிதான். யார் பெயரில் இருந்த பட்டாவை என் பெயருக்கு மாற்றி தரச் சொல்லி விண்ணப்பித்தேன் என்றால் பார்த்தசாரதி நாயுடு பெயரில் இருந்த பட்டாவை என் பெயருக்கு மாற்ற சொன்னேன். 2013 வரையில் பார்த்தசாரதி பெயரில் பட்டா இருந்ததா என்றால் 40 வருடமாக யார் பெயரிலும் பட்டா கொடுக்கவில்லை. 40 வருடமாக யார் பெயரிலும் பட்டா கொடுக்கவில்லை என்று கூறியுள்ள பட்சத்தில், பார்த்தசாரதி பெயரிலும் பட்டா இல்லையா என்றால் அது பற்றி தெரியாது. 40 வருடமாக பட்டா கொடுக்காதபட்சத்தில், 40 வருடமாக அது என்ன பட்டா என தெரியாது என்றால் சரிதான்.

**3**. **வா.த.சா.ஆ.13** ஆவணத்தில் கூறுச்சீட்டு என குறிப்பிட்டுள்ளபட்சத்தில், கூறுச்சீட்டு என்பது என்ன என்றால் வரி கட்டிய ரசீது ஆகும். கூறுச்சீட்டு மூலம் கிரயம் பெற்றதாக மேற்படி ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளபட்சத்தில், மேற்படி கிரய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் ஏதும் இல்லை என்றால்

சரிதான். வழக்கு சொத்து சம்பந்தமாக 1ம் பிரதிவாதியின் மாமனார் கோவிந்த கவுண்டர் பெயரில் பட்டா கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை, 40 வருடங்களாக யார் பெயரிலும் பட்டா கொடுக்கப்படவில்லை. கோவிந்த கவுண்டர் பெயரில் பட்டா இல்லாதபட்சத்தில், அவர் பெயரில் வரி கட்டிய ரசீது இருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல, ரசீதுகளை தாக்கல் செய்துள்ளோம்.

**4**. 2005ல் கோவிந்தகவுண்டர் காலமாகிவிட்டதாக எனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல, 12.10.1990ல் காலமாகியுள்ளார். 1990ல் கோவிந்த கவுண்டர் காலமான பிறகு அவரது பெயரில் வரி செலுத்த வாய்ப்பில்லை என்றால் சரியல்ல, 1991ல் அவரது பெயரில் வரி செலுத்தியுள்ளோம். 1990 முதல் 2013 வரை வழக்கு சொத்தை பொறுத்து பட்டா எண்.100 அல்லது 488 என ஒரு பட்டா தான் இருந்திருக்க முடியும் என்றால் அது பற்றி தெரியாது. நான் குறிப்பிட்ட 40 வருட காலக்கட்டத்தில் இரண்டு பட்டா இருந்தது என்றால் சரியல்ல, ஒரு பட்டா தான் கொடுப்பார்கள். 1984ல் தேவராஜ் மற்றும் பார்த்தசாரதி நாயுடு பெயரில் பட்டா எண்.488 இருந்தது என்றால் அதுபற்றி தெரியாது. ஒவ்வொரு சர்வே எண்ணிற்கும் ஒரு பட்டா இருக்கும் என்றால் சரிதான். ஒவ்வொரு பட்டாவிற்கும் வரி செலுத்தும்போது தேதியிட்டு தான் வரி செலுத்துவார்கள் என்றால் சரிதான்.

**8ஆம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது**.

**Ending time : 12.57 p.m.**

Taken down by me in Open court read over to the witness in the presence of the Plaintiff/Defendant and admitted by him/her to be correct.

Sd/-C. Mahalakshmi,
District Munsif,
Vandavasi.